# பாரதிதாசன் பல்கலைக்கழகம்,

**(Re-accredited with "A" Grade by NAAC)**

பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி – 620 024

தமிழ்நாடு, இந்தியா

முனைவர். க. துரையரசன், M.A., M.Ed., M.Phil., Ph.D

தேர்வு நெறியாளர் (பொ)

அலுவலகம் : 0431- 2407016, 2407060

தொலைப்படி: 0431 – 2407444

மின்னஞ்சல் : coe@bdu.ac.in

வலைத்தளம்: www.bdu.ac.in


---

கடித எண் : தேர்வுப்பிரிவு/M.B.A & M.C.A/ஏப்ரல் 2019 தேர்வு — நாள் : 21.03.2019

பெறுநர்

முதல்வர்

இணைவு பெற்ற (தன்னாட்சி பெறாத) கல்லூரிகள்

அய்யா/அம்மையீர்

பொருள்: முதுநிலை – எம்.பி.ஏ மற்றும் எம்.சி.ஏ – ஏப்ரல் 2019 தேர்வு எழுத்துத்தேர்வுகள், தேர்வு விண்ணப்பங்கள் பெறுவது – தொடர்பாக.

***

ஏப்ரல் 2019-ல் நடைபெறவிருக்கும் எம்.பி.ஏ மற்றும் எம்.சி.ஏ தேர்வுகளுக்கான பூர்த்தி செய்யப்பட்ட தேர்வு விண்ணப்பங்கள் உரிய கட்டணத்துடன் பெறுவதற்குரிய கடைசி நாள் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

<u>பூர்த்தி செய்யப்பட்ட தேர்வு விண்ணப்பங்கள் பெறுவதற்கு கடைசி நாள் :</u>

| | | |
|---|---|---|
| தண்டத் தொகையின்றி மாணவரிடமிருந்து தேர்வு விண்ணப்பங்கள் பெறுவதற்கு | : 03.04.2019 | (புதன் கிழமை) |
| தண்டத் தொகையின்றி பெறப்பட்ட தேர்வு விண்ணப்பங்கள் பல்கலைக்கழகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் | : 05.04.2019 | (வெள்ளிக்கிழமை) |
| தண்டத் தொகையுடன் மாணவரிடமிருந்து தேர்வு விண்ணப்பங்கள் பெறுவதற்கு | : 08.04.2019 | (திங்கள் கிழமை) |
| தண்டத் தொகையுடன் பெறப்பட்ட தேர்வு விண்ணப்பங்கள் கல்லூரி வாயிலாக பல்கலைக்கழகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் | : 10.04.2019 | (புதன் கிழமை) |
| எம்.பி.ஏ மற்றும் எம்.சி.ஏ எழுத்துத்தேர்வுகள் துவங்கும் நாள் | : 20.05.2019 | (திங்கள் கிழமை) |
| எம்.சி.ஏ செய்முறைத்தேர்வுகள் துவங்கும் நாள் | : 22.04.2019 | (திங்கள் கிழமை) |

<u>எம்.சி.ஏ மற்றும் எம்.பி.ஏ திட்டக்கட்டுரை வாய்மொழித் தேர்வு:</u>

| | | |
|---|---|---|
| திருச்சி, கரூர், அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களை சார்ந்த இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரிகள் | : 02.05.2019 | (வியாழக்கிழமை) |
| புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவடங்களைச் சார்ந்த இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரிகள் | : 06.05.2019 | (திங்கள் கிழமை) |

மேற்கண்ட தகவலை மாணவ/மாணவியாகளுக்கும், மற்றும் ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கும் வகையில் கல்லூரி அறிவிப்புப் பலகையில் வெளியிடுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

90 நாட்கள் கல்லூரி, இயங்கியதற்குரிய சான்றிதழைத் தேர்வு துவங்குவதற்குப் பத்து நாட்கள் முன்னதாகப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கும்படி கல்லூரி முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். எம்.பி.ஏ மற்றும் எம்.சி.ஏ பாடங்களுக்கான தேர்வு விண்ணப்பங்களை தனித்தனியாக இணைப்புக் கடிதங்களுடன் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. இணையதளம் வழியாக செலுத்தப்பட்ட E-ரசீதுடன் தேர்வு கட்டண

சுருக்கப் பட்டியல் (Abstract for examination fee – Downloadable from University Website)கண்டிப்பாக அனுப்பப்பட வேண்டும். அவ்வாறு தேர்வு கட்டண சுருக்கப்பட்டியல் இல்லாத E-ரசீதுகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என கனிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மீளப்பயிலுதல் (Re-do), மறு சேர்க்கை (Re-admission) மற்றும் மாற்றுச் சேர்க்கை (Transfer admission) போன்ற விபரங்களை தேர்வு கட்டண சுருக்கப்பட்டியலில் தெளிவாக குறிப்பிட வேண்டும். மேற்கண்ட சேர்க்கைகளுக்காகப் பதிவாளரிடமிருந்து பெறப்பட்ட ஆணையின் நகலை இணைத்து அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பூர்த்தி செய்யப்பட்ட தேர்வு விண்ணப்பங்கள் அனைத்தும் பல்கலைக்கழகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாளான 10.04.2019 (வெள்ளிக்கிழமை)-க்குப் பின்னர் வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

இக்கடிதம் கிடைக்கப் பெற்றமைக்கு ஒப்புதல் அளிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள

22/3/19

தேர்வு நெறியாளர்